# ஆகஸ்டு-2020ம் மாத சாதாரண மன்ற கூட்டப்பொருள் ஜீலை மாத பொருள் 2020

மன்ற பொருள்: 1

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள டிஎன்.69ஏஆர் 6018 என்ற குடிநீர் விநியோக வாகனம் மராமத்து பணிகள் மற்றும் பழுதுகள் ஆகியவற்றினை சரிசெய்து தகுதி சான்று பெறுவதற்கு, ஆணையரின் முன் அனுமதி பெற்று, மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யனார் ஆட்டோமொபைல் இஞ்சினியரிங், தூத்துக்குடி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.145656/— (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரத்து அறுநூற்றி ஐம்பத்திஆறு மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு—

அனுமதிக்கலாம்

ந.க.எண். 201/2018/அ3

**தீர்மான எண்.2038 அனுமதிக்கப்பட்டது**

மன்ற பொருள்: 2

காயல்பட்டிணம் நகராட்சியில் டிரைவர்-1,மற்றும் அலுவலக காவலர்-2 ஒப்பந்த அடிப்படையில் பணியாட்கள் டெக்ஸ்கோ(முன்னாள் இராணுவத்தினர்) நிறுவனத்திலிருந்து பணிசெய்து வருகிறார்கள்.அன்னாருக்கு ஊதியஉயர்வு அரசு உத்தரவின்படி வழங்கப்பட்டு வருகிறது.தற்போது அந்நிறுவன கடிதம் Lr.No.TEXCO/14003/14021/TNMW/Revised VDA 2020.Dt-04.06.2020 ன்படி அகவிலைப்படி உயர்வு 01.04.2020 முதல் உயர்வு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

அ.கு.

மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்படுகிறது.

**தீர்மான எண் 2039 அனுமதிக்கப்பட்டது.**

மன்றபொருள்: 3

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி ஜீலை 2020ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.2040 அனுமதிக்கப்பட்டது**

# ஆகஸ்டு மாத பொருள் 2020

**மன்றப்பொருள்: 1**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில், மாவட்ட ஆட்சியர் அவர்களின் 18.07.2020ம் தேதிய நேரடி ஆய்வின்போது அறிவுறுத்தியபடி, நகராட்சி பகுதிகளில் தினசரி 4 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. மேற்படி மருத்துவ முகாம்களில் பயன்படுத்தும் பொருட்டும் அவசர அவசியம் கருதி 5 எண்ணம் ஆக்ஸி மீட்டர் மற்றும் 5 எண்ணம் தெர்மல் ஸ்கேனர்ஆகியன ஆணையாளரின் முன் அனுமதி பெற்று வாங்கிய வகைக்கு செலவு தொகை ரூ.42,495/– னை இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.ஹ. சிதம்பரராமலிங்கம், என்பவர் தன்னால் செலுத்தப்பட்டள்ளது எனவும், அதனை தற்போது தனது பெயருக்கு வழங்கிடுமாறும் கோரியுள்ளதால் அதனை இநநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றம் அனமதிக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.369/2020/அ4
**தீர்மான எண்.2041 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்: 2**

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண்.158/98/2014ன்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்காக 40 தற்காலிக பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஊதிய நிர்ணயம்படி மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்சமயம் மேற்படி பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண். 13433/2018/ஜே1 நாள் 17.09.2018 ன்படி, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, மேற்படி டெங்கு ஒழிப்பு பணிகளை, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திடவும், மேற்படி டெங்கு ஒழிப்பு பணியாளர்களுக்கான ஊதியம் வழங்கிட உத்தேச தொகை (3 மாதத்திற்கு) ரூ.11,00,000/–னை (பதினோரு இலட்சம் மட்டும்) பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.720/2014/அ1

**தீர்மான எண்.2042 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்: 3

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, பொது சுகாதார துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் மூலம் அறிவுறுத்தப்பட்டதன் படியும், இந்நகராட்சி பகுதியில் கோவிட் –19 தொடர்பாக பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில் இது குறித்த விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் வைப்பதற்கும், பொது இடங்களில் தெளிப்பதற்கு ஏற்றவாறு கிருமிநாசினியாகிய லைசால் மற்றும் இது தொடர்பாக தேவையான பொருட்களை அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று, ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர் அனுமதி பெறப்பட்டு கொள்முதல் செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகையினை பொது நிதியில் இருந்து வழங்கிடவும், பின்னர் அரசு மான்யம் ஏதேனும் இது தொடர்பாக பெறப்படும் பொழுது இதனை அவற்றில் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.369/2020/அ4

**தீர்மான எண்.2043 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்: 4**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்ஜ மற்றும் தற்போயை மழைக்காலம் வர இருப்பதால், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இந்நகராட்சியின் தூய்மை பணியாளர்களுகு வழங்கிடும் பொருட்டு பொது சுகாதார பிரிவிற்கு தேவையான தளவாடச்சாமான்கள் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அற்கான உத்தேச செலவின தொகை ரூ.6.25 இலட்சம் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.741/2020/அ4

**தீர்மான எண்.2044 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்: 5</u>**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, பொது சுகாதார துறை, தூத்துக்குடி மூலம் அறிவுறுத்தப்பட்டதன் படியும், இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில் தெளிப்பதற்கு ஏற்றவாறு கிருமிநாசினியாகிய பிரிசால் என்ற ஹெர்பல் மருந்தினை அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.2.10 இலட்சம் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண்.742/2020/அ4</u>

**தீர்மான எண்.2045 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்: 6</u>**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, பொது சுகாதார துறை, தூத்துக்குடி மூலம் அறிவுறுத்தப்பட்டதன் படியும், இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில் பணிபுரிகின்ற இந்நகராட்சியின் தூய்மை பணியாளர்களின் நலன் கருதி அவர்களுக்கு முககவசம் (என் 95) வழங்கிடும் பொருட்டு அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.1.00 இலட்சம் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண்.742/2020/அ4</u>

**தீர்மான எண்.2046 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்: 7</u>**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் தற்போதைய மழைக்காலம் வர இருப்பதால், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இந்நகராட்சியின் பொது இடங்களில் பயன்படுத்தும் பொருட்டு பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கொசு ஒழிப்பு மருந்துகளான **டெமிபாஸ்** மற்றும் பைரத்திரம் ஆகியவற்றினை அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு—</u>

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக பொது மக்களின் நலன் கருதி

அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண்.740/2020/அ4</u>

**தீர்மான எண்.2047 அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்: 8</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி ஆகஸ்ட் 2020ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு—</u>
மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.2048 அனுமதிக்கப்பட்டது**

<u>மன்றப்பொருள்: 9</u>

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் கோவிட் 19 தடுப்பு நடவடிக்கையாக முககவசம் அணிதல் மற்றும் சமூகஇடைவேளி கடைபிடித்தல் போன்றவைகள் பற்றி விழப்புணர்வு ஏற்படுத்த சுகாதார ஆய்வாளரின் அறிக்கை படி நகராட்சி பகுதியில் 22 எண்ணம் விளம்பர பாதகைகள் வைப்பதற்கும் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய சாந்தா டிஜிட்டல் ஆறுமுகநேரி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் செலவுத்தொகை ரூ.27,500/- னை பொது நிதியில் இருந்து வழங்கிடவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.369/2020/அ4

**தீர்மான எண்.2049 அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ)
காயல்பட்டணம் நகராட்சி